பகைவரிடம் அன்பு காட்டுதல்

பாடம் 14

சிறுவர்களாகிய நாங்கள் எமது நண்பர்களை நேசிக்கின்றோம் அல்லவா? அவர்களால் எமக்கு ஏற்படும் இன்னல்களை பொருட்படுத்துவது இல்லை. என்றாலும் எம்மீது அன்பு கூராதவர்களால் ஏற்படும் இன்னல்களுக்காக கோபப்படுகின்றோம். எம்மில் அன்பு கூறாதவர் மேல் அன்பு காட்டுதல் இலகுவானதா? இயேசு என்ன கூறுகின்றார்?

"உங்கள் பகைவரிடம் அன்பு கூருங்கள்.

உங்களை வெறுப்போருக்கு நன்மை செய்யுங்கள்.

உங்களை சபிப்போருக்கு ஆசி கூறுங்கள்.

உங்களை இகழ்ந்து பேசுவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள.

உங்களை ஒரு கன்னத்தில் அறைபருக்கு மறுகன்னத்தையும் திருப்பிக் காட்டுங்கள்.

உங்கள் மேலுடையை எடுத்துக்கொள்பவர் உங்கள் அங்கியையும் எடுத்துக் கொள்ளப் பார்த்தால் அவனைத் தடுக்காதீர்கள் உங்களிடம் கேட்கும் எவருக்கும் கொடுங்கள்.

உங்களுடைய பொருள்களை எடுத்துக்கொள்வோரிடமிருந்து அவற்றைத் திருப்பிக் கேட்காதீர்கள்".

ஆண்டவர் இயேசுவால் கூறப்பட்ட இவ்வாக்கியங்களை பின்பற்றி வாழ்வோமானால் அனைவரையும் சிநேகித்து வாழ முடியும்.

பிறர் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறீர்களோ, அதையே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள் என்பது ஆண்டவர் இயேசுவால் கூறப்பட்ட பொன் கட்டளை''யாகக் கருதப்படுகின்றது. நாமும் இதற்கேற்ப வாழ்ந்து அனைவரிடமும் சிநேகத்துவத்துடன் வாழ்வோம்.

செயற்பாடு

1. லூக்கா 6:31 வாசிக்கவும்.

2. இவ் வாக்கியத்தை உமது பயிற்சி புத்தகத்தில் பிரதி பண்ணவும்.

3. எழுதப்பட்ட வாக்கியத்தை மனனம் செய்யவும்.

4. ''பொன்கட்டளை'' என்பதற்கு பொருத்தமான போஸ்டரை தயாரித்து வகுப்பில் காட்சிக்கு வைக்கவும்.